செ.வெ.எண்: 366 நாள்: 17.06.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (17.6.2019) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசால் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் வாரந்தோறும் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் கலந்துகொள்ளும் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.

இன்றைய மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, வங்கி கடன், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி, முதியோர் உதவித்தொகை, திருநங்கைகளுக்கான வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வழியுறுத்தி 367 மனுக்கள் வரப்பெற்றன. வரப்பெற்ற மனுக்களை தொடர்புடைய அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சமூக நலத்துறையின் சார்பில், பள்ளிகளில் சுகாதாரமான முறையில் சமையல் தயார் செய்திடும் வகையில் சத்துணவு ஊழியர்களுக்கு சுகாதார பொருட்கள் அடங்கிய பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**